**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – நிதிநிலை அறிக்கை 2010–2011 – மாநில அரசின் பல்வேறு நலத் திட்ட உதவிகளை மாற்றுத் திறனாளிகள் பெற்றிட நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமான உச்சவரம்பை 2010–2011ம் நிதியாண்டிலிருந்து முற்றிலும் நீக்குதல் –ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நலத் (மா.தி.ந. 2) துறை

அரசாணை(நிலை) எண். 31 நாள்: 28–06–2010

ஆனி 14, திருவள்ளுவர் ஆண்டு 2041

படிக்க:

1. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித எண். 10386/ஊ.ம.ம.2.2/2009, நாள்16.12.2009 மற்றும் 19.3.2010.

------

**ஆணை:**

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் 2010–2011ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் ஏனையவற்றுடன், மாநில அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாற்றுத் திறனாளிகள் பெற்றிட நிர்ணயிக்கப்பட்டுள்ள வருவாய் உச்சவரம்பு முற்றிலும் நீக்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தற்போது, மாற்றுத் திறனாளிகள் தங்களது குறைந்த வருமானத்தில் அவர்களது குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களின் மருத்துவ மற்றும் கல்விச் செலவுகளை மற்ற சாதாரண நபர்களைப் போன்று எதிர்கொள்ள இயலாது எனவும், வருமான உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் நலத்திட்ட உதவிகளைப் பெறுவதற்கு அது தடையாக உள்ளது எனவும், மேலும் பல்வேறு நலத் திட்டங்களுக்கு பல்வேறு வருமான உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் மாற்றுத் திறனாளிகளிடையே குழப்பம் நிலவுவதாகவும், திட்டத்தை செயல்படுத்துவதிலும் நடைமுறை சிக்கல்கள் எழுகின்றன எனவும், மேலும் நலத் திட்டங்களின் பலன்களைப் பெறுவதற்கு மாற்றுத் திறனாளிகள் வருமானச் சான்றிதழ் பெறுவதற்கு சிரமங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது என்றும், எனவே மாநில அரசின் பல்வேறு நலத் திட்ட உதவிகளை மாற்றுத் திறனாளிகள் பெற்றிட மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை மற்றும் குறைபாடுகளுக்கான மருத்துவச் சான்றிதழை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொண்டு நலத் திட்ட உதவிகள் வழங்கலாம் எனத் தெரிவித்து, 2010–2011ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக மாநில அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாற்றுத் திறனாளிகள் பெற்றிட நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமான உச்சவரம்பினைக் கீழ்கண்ட திட்டங்களுக்கு 2010–2011ம் நிதியாண்டிலிருந்து முற்றிலும் நீக்கி உரிய அரசாணைகள் வெளியிடுமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | | திட்டத்தை செயல்படுத்துவதால் தேவைப்படும் கூடுதல் நிதியொதுக்கம் ரூ. |
|---|---|---|---|
| 1. | படிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டம் | | 41,45,000/– |
| 2. | வாசிப்பாளர் உதவித் தொகை வழங்கும் திட்டம் | | 8,90,000/– |
| 3. | சட்டப் படிப்பு படித்த மாற்றுத் திறனாளிகளுக்கு நிதி உதவி வழங்கும் திட்டம் | | 15,000/– |
| 4. | சுயவேலைவாய்ப்புத் திட்டங்கள் | | 60,00,000/– |
| 5. | 1. | உதவி உபகரணங்கள்இலவசமாக வழங்கும் திட்டம் | 30,00,000/– |
| | 2. | இலவசமாக நவீன செயற்கை உறுப்புகள் வழங்கும் திட்டம். | 10,00,000/– |
| | 3. | மோட்டார் பொருத்தப்பட்ட இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் | 18,50,000/– |
| | 4. | பேட்டரியால் இயங்கும் எலக்ட்ரிக் ஸ்கூட்டர் வழங்கும் திட்டம் | 52,50,000/– |
| 6. | இலவச பேருந்து பயணச் சலுகை வழங்கும் திட்டம் | | 4,00,00,000/– |
| 7. | கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டம் | | 60,00,000/– |
| | மொத்தம் | | 6,81,50,000/– |

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை ஏற்று பின்வருமாறு அரசு ஆணையிடுகிறது.

i. மாநில அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாற்றுத் திறனாளிகள் பெற்றிட நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமான உச்சவரம்பு 2010–2011ம் நிதியாண்டிலிருந்து முற்றிலும் நீக்கப்படுகிறது.

ii. மாநில அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாற்றுத் திறனாளிகள் பெற்றிட மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை மற்றும் குறைபாடுகளுக்கான மருத்துவச் சான்றிதழைக் கணக்கில் எடுத்துக் கொண்டு நலத் திட்ட உதவிகள் வழங்கப்படும்.

iii. மாநில அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாற்றுத் திறனாளிகள் பெற்றிட நிர்ணயிக்கப்பட்டுள்ள வருமான உச்சவரம்பினை 2010–2011ம் நிதியாண்டிலிருந்து முற்றிலும் நீக்குவதால் மேலே பத்தி 2இல் கூறப்பட்டுள்ள திட்டங்களுக்கு தேவைப்படும் கூடுதல் செலவினம் ரூ.6,81,50,000/–(ரூபாய் ஆறு கோடியே எண்பத்தோரு இலட்சத்து ஐம்பதனாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்படுகிறது.

4. மேலே பத்தி 3(iii)ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள கூடுதல் இனங்களுங்ககான செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

i. படிப்பு உதவித் தொகை (Scholarship) வழங்கும் திட்டம் ரூ.41,45,000/– , மற்றும்

ii. வாசிப்பாளர் உதவித் தொகை (Readers Allowance) வழங்கும் திட்டம் ரூ. 8,90,000/–
"2235 – சமூக பாதுகாப்பு நலனும் – 02–சமூக நலன் – 101 – மாற்றுத் திறனாளிகள் நலன் - I – திட்டத்தில் சேராதது – BB – மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு படிப்பு உதவித் தொகைகள் – 12 படிப்பு உதவித் தொகைகளும், பயிற்சி உதவித் தொகைகளும் – 09 ஏனையவை
(த.தொ.கு.2235-02-101-BB-1290).

iii. மாற்றுத் திறனாளி சட்டப் பட்டதாரிகள் வழக்குரைஞர்களாகப் பதிவு செய்தவற்குரிய கட்டணம் செலுத்துவதற்கும், சட்டப் புத்தகங்கள் வாங்குவதற்கும் நிதியுதவி ரூ. 15,000/–

"2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் –101. மாற்றுத் திறனாளிகள் நலன் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II. மாநில திட்டம்– LC மாற்றுத் திறனாளி சட்டப் பட்டதாரிகள் வழக்குரைஞர்களாகப் பதிவு செய்தவற்குரிய கட்டணம் செலுத்துவதற்கும், சட்டப் புத்தகங்கள் வாங்குவதற்கும் நிதியுதவி –09. உதவித் தொகை – 01. நடப்புச் செலவுக்கான உதவித் தொகை (த.தொ.கு.2235 02 101 LC 0913)"

iv. சுயவேலைவாய்ப்பு திட்டங்கள் ரூ. 60,00,000/–

"2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் –101. மாற்றுத் திறனாளிகள் நலன் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II. மாநில திட்டம் – JV மாற்றுத் திறனாளிகளுக்கான சுயவேலை வாய்ப்பு – 70 வேலை வாய்ப்பின்மை நிவாரணம். (த.தொ.கு.2235 02 101 JV 7009)"

v. (1) உதவி உபகரணங்கள் இலவசமாக வழங்கும் திட்டம் ரூ. 30,00,000/–

"2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் –101. மாற்றுத் திறனாளிகள் நலன் பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II மாநில திட்டம் – JH மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வுத் திட்டம் – 19 இயந்திரமும், சாதனமும்–01 வாங்குதல்''.
(த.தொ.கு.2235 02 101 JH 1914)

v (2) இலவசமாக நவீன செயற்கை உறுப்புகள் வழங்கும் திட்டம் ரூ.10,00,000/–

"2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் –101. மாற்றுத் திறனாளிகள் நலன் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II. மாநில திட்டம் – JH மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வுத் திட்டம் – 24 பொருள்களும் வழங்கலும்''.
(த.தொ.கு.2235 02 101 JH 2404)

v (3) மோட்டார் பொருத்தப்பட்ட இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் ரூ.18,50,000/–

“ **2235**– சமூக பாதுகாப்பும் மற்றும் நலனும்–**02**– சமூக நலன்–**101**–மாற்றுத் திறனாளிகள் நலன் பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் II மாநிலத் திட்டம் –MK–மோட்டார் பொறுத்திய தையல் இயந்திரங்கள் வழங்குதல் – **19**–இயந்திரமும் சாதனமும் –**01**–வாங்குதல்”
(த.தொ. கு. **2235–02–101**–MK 1915)

v (4) பேட்டரியால் இயங்கும் எலக்ட்ரிக் ஸ்கூட்டர் வழங்கும் திட்டம் ரூ. **52,50,000/–**

“:**2235**–சமூகப் பாதுகாப்பும் நலனும்–**02**–சமூக நலன்–**101** மாற்றுத் திறனாளிகள் நலன் பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் II – மாநிலத் திட்டம்–JH–மாற்றுத் திறனாளிகளுக்கான மறுவாழ்வுத் திட்டம்–**19**– இயந்திரமும் சாதனமும் –**01**–வாங்குதல்’’.
(த.தொ.கு. **2235–02–101–JH–1914**)

vi. இலவச பேருந்து பயணச் சலுகை வழங்கும் திட்டம் ரூ. **4,00,00,000/–**

“ **2235**– சமூகப் பாதுகாப்பும் நலனும் –**02**–சமூக நலன்–**101**–மாற்றுத் திறனாளிகள் நலன் –I திட்டத்தில் சேராதது–BG. மாற்றுத் திறனாளிகளுக்குப் பயணச் சலுகை–**42** பணி அல்லது பொறுப்பேற்ற செலவுகள்
(த.தொ.கு. **2235–02–101–BG–4206**)

vii கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டம் ரூ. **60,00,000/–**

அ. பராமரிப்பு உதவித் தொகை – ரூ.**57,00,000/–**

“ **2235**– சமூகப் பாதுகாப்பும் நலனும் –**02**–சமூக நலன்–**101**–மாற்றுத் திறனாளிகள் நலன் – I திட்டத்தில் சேராதது–CD–கடுமையாக இயலாமைபுற்றோருக்குப் பராமரிப்புப் படிகள் – **09**–உதவித் தொகை–**03**–குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை”
(த.தொ.கு. **2235–02–101–CD–0938**)

ஆ. பணவிடை அஞ்சல் செலவினம் –ரூ. **3,00,000/–**

**05**–அலுவலகச் செலவுகள்–**04**–அலுவலகப் பணி அஞ்சல் வில்லைகள் மற்றும் தபால் செலவு”(த.தொ.கு. **2235–02–101–CD–0545**)

**5.** மேலே பத்தி **3(iii)**ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு “புது துணைப் பணி” குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாரா செலவின நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கான ஆணை நிதி (வ.செ. பொ– I) துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெற உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ. பொ–I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின்அ.சா.எண். Fin(WDAP)/07/DS/GR/2010 நாள் 28.6.2010ன் மற்றும் நிதியொதுக்கப் பேரேடு எண். 380(முந்நூற்று எண்பது) ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சோ.சு. ஜவஹர்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/9/35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18/35
தலைமக் கணக்காயர், சென்னை– 18/35 (பெயரில்)

**<u>நகல்:-</u>**

நிதி [(சந) (வ.செ.பொது–II)/வ.செ.பொது–I)]துறை, சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, அனைத்துப் பிரிவுகள்.
இருப்பு கோப்பு/உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.